# வழிதவறிப்போன மூன்று பிரிவுகளைப் பற்றிய

# எச்சரிக்கை


## நூலாசிரியர்

அல்-அல்லாமதுல் முதபன்னின்

**அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹு ழ்ழாஹ்**

(வபாத்: ஹி-1429, கி.பி. 2008)



**தமிழாக்கமும் வெளியீடும்**

MRCA/13/1/PAS/08.ESTD 2010

**இமாம் அல் அஷ்அரீ رضي الله عنه அறபுக் கல்லூரி - கொழும்பு**

Al Imam Al Asha^ri رضي الله عنه Arabic College,
Colombo. Sri Lanka.

ESTD 1982
MRCA/QM/BT/41

Hidhayah Arabic College.

**அஷ்ஷைய்க் மீரான் முபீன் ஆலிம் இப்னு**
**அஷ்ஷைய்க் ஹாமிது லெப்பை ஆலிம் ஹதீஸ் மண்டபம்**

No 03, Aalim Place Lane, Sir Razik Fareed Mawatta,
Kathankudy 04.

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வழிதவறிப்போன மூன்று பிரிவினர்களைப் பற்றிய எச்சரிக்கை |
| நூலாசிரியர் பெயர் | : | அல் அல்லாமதுல் முதபன்னின் அப்துழ்ழாஹ் அல் ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் |
| தமிழாக்கம் | : | இமாம் அல் அஷ்அரீ கலாபீடம் |
| பதிப்பு | : | முதலாவது |
| ஆண்டு | : | ஹிஜ்ரீ 1442 ரபீஉனில் அவ்வல் - கி.பி. 2020 நவம்பர் |
| பக்கங்கள் | : | 34 |
| பிரதிகள் | : | 5000 |
| வெளியீட்டு எண் | : | 08 |
| வெளியீடு | : | இமாம் அல் அஷ்அரீ கலாபீடம் |
| தொடர்புகளுக்கு | : | 0770779406 0772328686 |

# முன்னுரை

புகழ் யாவும் படைப்புகள் அனைத்தையும் இல்லாமையிலிருந்து படைத்து, அவைகளுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாத, உடலற்ற, உருவமற்ற அழ்ழாஹ்வுக்கே உரித்தாகட்டுமாக!. மேலும் அதிக சிறப்புகளையும், தன் உம்மத்தின் மீது முஹம்மத் ﷺ அவர்கள் எதையெல்லாம் பயப்படுவார்களோ அது அனைத்தை விட்டும் அச்சமின்மையையும் அழ்ழாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

வழிதவறிப்போன மூன்று பிரிவுகளைப் பற்றிய எச்சரிக்கை என்ற இந்த சிறு நூலானது, இன்று இஸ்லாமிய உலகுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் வஹ்ஹாபிகள், குத்பிய்யாக்கள் மற்றும் ஹிஸ்புத் தஹ்ரீர் ஆகியோரது வழிகேடுகளை அடையாளம் காட்டி, அவைகளை குர்ஆன், சுன்னஹ் ஆதார அடிப்படையில் முறியடித்து, தூய அஹ்லுஸ் சுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கொள்கையில் முஸ்லிம்கள் நிலைத்து நிற்க வேண்டும் என்ற தூய நோக்கில் எழுதப்பட்ட மிகச் சுருக்கமான நூலொன்றாகும். இச்சிறு நூலானது, அல்அல்லாமஹ் அல்முஹத்திஸ் அல்ஹாபிழ் அல்முதகல்லிம் அல்உஸூலிய் அல்-இமாம் அப்துழ்ழாஹ் அல் ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அஹ்லுஸ் சுன்னஹ் வல் ஜமாஅத்தினர்களின் தூய கொள்கை தொடர்பாகவும் அதற்கு முரண்படும் வழிகேடர்களின் வழிகேடுகளை தோலுரிக்கும் விதமாகவும் தொகுத்த மிகப்பெறுமதி வாய்ந்த நூற்றுக்கணக்கான நூற்களில் ஒன்றாகும்.

மேற்குறித்த வழிகேடர்களின் உண்மை நிலையை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் இது மாதிரியான நூற்களின் அவசியமறிந்தும், முஸ்லிம்கள் இவர்களின் உண்மை முகமறிந்து இவர்களை விட்டும் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே இந்த நூல் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அழ்ழாஹ்வின் திருப்பொருத்தம் நாடி செய்யப்பட்ட இந்த அமலை அழ்ழாஹ் கபூல்செய்து, இதன் மூலம் அனைத்து முஸ்லிம்களுக்கும் பயனளிப்பானாக!

⃠ வஹ்ஹாபிகள் எனப்படுவோர் ஹிஜ்ரி 1206 (கி.பி. 1792)ம் ஆண்டு (இற்றைக்கு சுமார் 230 வருடங்களுக்கு முன்) மரணித்த நஜ்த் (ரியாத்) என்ற பகுதியைச் சேர்ந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவரின் சிந்தனைகளைக் கொண்டோர்களாகும்.

⃠ குத்பிய்யாக்கள் எனப்படுவோர் ஹிஜ்ரி 1387 – (கி.பி. 1967)ம் ஆண்டு (இற்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்) மரணித்த எகிப்தைச் சேர்ந்த செய்யித் குதுப் என்பவரின் சிந்தனைகளைக் கொண்டோர்களாகும்.

⃠ ஹிஸ்புத் தஹ்ரீர் எனப்படுவோர் ஹிஜ்ரி 1400 (கி.பி. 1980)ம் ஆண்டு (இற்றைக்கு சுமார் 40 வருடங்களுக்கு முன்) மரணித்த பலஸ்தீன் நாட்டைச் சேர்ந்த தகிய்யுதீன் அன்-நபஹானீ என்பவரின் சிந்தனைகளை கொண்டோர்களாகும்.

## வஹ்ஹாபிகள்

முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் ஓர் அறிஞர் என்று அக்காலத்து அறிஞர்கள் எவரும் சான்றுபகரவில்லை. மேலும் அவர் ஹன்பலீ, ஹன்பலீ அல்லாத மத்ஹபுகளைச்சார்ந்த அவரது ஊர்வாசிகள் மற்றும் அவர்களல்லாத முஸ்லிம்கள் இருந்த கொள்கைக்கு மாறுபட்டதனால் முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாபின் சகோதரரான சுலைமான் இப்னு அப்தில் வஹ்ஹாப் அவர்கள் தன் சகோதரரின் கொள்கைகளை எதிர்த்து இரண்டு மறுப்புகளைத் தெரிவித்துள்ளார்கள். அவ்விரு மறுப்புகளிலொன்று 'அஸ்ஸவாஇகுல் இலாஹிய்யஹ் பிர் ரத்தி அலல் வஹ்ஹாபிய்யஹ்' என்றும் மற்றையது 'பஸ்லுல் ஹிதாப் பிர் ரத்தி அலா முஹம்மதிப்னி அப்தில் வஹ்ஹாப்' என்றும் பெயரிடப்பட்டுள்ளன. அதேபோன்று ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த மக்காவின் பிரபல முப்தியான முஹம்மத் இப்னு ஹுமைத் என்பவர் ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களை வரிசைப்படுத்திக்கொண்டு வருகையில் அதில் இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபை குறிப்பிடவில்லை. அதில் ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த சுமார் 800 அறிஞர்களை பட்டியலிட்ட இமாமவர்கள் வஹ்ஹாபிகளின் தலைவனான முஹம்மத் இப்னு

அப்துல் வஹ்ஹாபை குறிப்பிடாது அவரின் தந்தையான அப்துல் வஹ்ஹாபின் பெயரைக் குறிப்பிட்டு இவரின் அறிவாற்றலை சிறப்பித்தும் கூறியுள்ளதோடு, அப்துல் வஹ்ஹாப் என்ற அந்த அறிஞர் தனது மகன் முஹம்மதின் மீது கடும் கோபம் கொண்டிருந்ததாகவும், மகனிடம் காணப்பட்ட வழிகேடான கோட்பாடுகளை விட்டும் மக்களை எச்சரித்த வண்ணமே இருந்ததாகவும் மேலும் அப்துல் வஹ்ஹாப் அக்கால மக்களிடம் "நான் எனது மகனிடத்தில் பல மோசமான கொள்கைகளைக் காண்கிறேன். நீங்கள் அவரிடம் எச்சரிக்கையாக இருங்கள்" என்று கூறிக்கொண்டிருப்பார் எனக் கூறியுள்ளார். முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு ஹுமைத் அவர்கள் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் மரணித்து சுமார் 80 வருடங்களின் பின் வபாத்தானவராகும்.

இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் புதிய மார்க்கமொன்றை உருவாக்கினார். இதையே அவரைப் பின்பற்றுவோருக்கு போதிக்கவும் செய்தார்.

**இந்த அவரது மார்க்கத்தின் அடிப்படையானது** அல்லாஹ்வை படைப்பினங்களுடன் ஒப்பாக்குவதும், மேலும் அல்லாஹ்வை அர்ஷில் உட்கார்ந்திருக்கும் ஒரு சடப்பொருளாக நம்புவதுமாகும். இந்த நம்பிக்கையானது அல்லாஹ்வை படைப்பினத்துக்கு ஒப்பாக்குவதாகும். ஏனெனில் உட்காருதல் மனிதர்களின் பண்பாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் சொல்லாகிய

لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ

("படைப்பினங்களில் எதுவும் யதார்த்தத்திலோ, பண்புகளிலோ, செயல்களிலோ அல்லாஹ்வைப் போன்று இருக்கவே மாட்டாது.")

*அத்தியாயம் : அஷ்ஷூறா வசனம் : 11*

என்பதற்கு அவர் முரண்பட்டுவிட்டார்.

“ யார் மனிதர்களிடத்தில் காணப்படும் ஒரு பண்பை அல்லாஹ்வுக்கும் இருப்பதாக நம்புவாரோ அவர் திட்டவட்டமாக காபிரானவர்” என்று அஸ்-ஸலபுஸ்ஸாலிஹீன்களில் ஒருவரான இமாமுனா அல்முஹத்திஸ், அபூ ஜஃபர் அத்தஹாவீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது அகீததுத் தஹாவிய்யஹ் என்ற நூலில் சொல்லியுள்ளது போலவே ஏனைய அஸ்-ஸலபுஸ்ஸாலிஹூன்கள் அனைவரும் மாற்றுக்கருத்தின்றி கூறியிருக்கிறார்கள்.

**மேலும் இந்த வஹ்ஹாபிகளின் சிந்தனைகளில் நின்றுமுள்ளதுதான்**

- 'யா முஹம்மத்' என்று கூறுபவர்களை காபிர்கள் என்று முடிவுசெய்தல்.
- பறக்கத் பெறும் நோக்கில் நபிமார்களது, அவ்லியாக்களது மண்ணறைகளை ஸியாறத் செய் வோரை காபிர்கள் என்று முடிவுசெய்தல்.
- பறக்கத் பெறும் நோக்கில் கப்றுகளைக் தொடுபவர்களை காபிர் என்று முடிவுசெய்தல்.
- குர்ஆன் வசனமும், திக்ருகளும் அடங்கிய தாயத்துகளை நெஞ்சின் மீது தொங்க விடுபவர்களை காபிர்கள் என முடிவு செய்தல்.
- மேற்குறித்த விடயங்களை சிலை வணக்கமாக ஆக்கியமை.

இதன் மூலம் இவர்கள் ஸஹாபாக்கள் மற்றும் ஸலபுஸ்ஸாலிஹீன்களின் கொள்கைக்கு மாறுபட்டுவிட்டனர்.

துயரங்கள் ஏற்படும் வேளை, “ யா முஹம்மத்” என்று கூறுவது ஆகுமென்பது ஸஹாபாக்கள், அவர்களைத் தொடர்ந்து வந்த ஸலபுஸ்ஸாலிஹீன்கள் உட்பட காலநெடுகிலும் வாழ்ந்து வரும் முஃமின்களைத் தொட்டும் நிரூபனமானதே. பறக்கத் பெறுவதின் மூலம் அல்லாஹ்வின் றஹ்மத்தின் பக்கம் நெருங்குவதற்காக ரசூலுல்லாஹி ﷺ அவர்களின் கப்றையும், மிம்பரையும் தொடுவது மற்றும் அவ்விரண்டையும் முத்தமிடுவது ஆகும் என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் றஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வஹ்ஹாபிகள் இமாம் அஹ்மத் அவர்களின் பக்கம் பொய்யாக இணைந்துகொள்கிறார்கள். இது அவர்களது பிரபல நூலான “அல் ஜாமிஃ பில் இலல் வமஃரிபதிர்

ரிஜால்'' என்ற நூலில் உள்ளது.

மேலும் முஹம்மத் ﷺ அவர்களின் வபாத்தின் பிறகு அவர்களைக் கொண்டு அழ்ழாஹ்விடம் உதவி தேடுபவர்களையும், வஸீலஹ் தேடுவோரையும் வஹ்ஹாபிகள் காபிர்களாக்கி உம்மத்தை விட்டும் தனிப்பட்டுவிட்டார்கள்.

ஏனெனில் வஹ்ஹாபிகள், உயிருடன் முன்னிலையில் இருப்பவர் அல்லாதவரைக் கொண்டு வஸீலஹ் செய்வது குப்ராகும் எனக் கூறுகின்றனர். அவர்கள் உருவாக்கிய இந்த சட்டத்தை வைத்து இந்த விடயத்தில் அவர்களுக்கு மாறுசெய்வோரை காபிராக்குவதையும், கொல்வதையும் ஹலாலாக்குகின்றனர். ஏனெனில் அவர்களின் தலைவரான முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் கூறுகிறார் : '' யார் எமது அழைப்புக்குள் நுழைகிறாரோ எங்களுக்கு உரிய அனைத்தும் அவருக்குண்டு. யார் நுழையவில்லையோ அவர் காபிர். அவரைக் கொல்வதும் ஆகுமாகும்.''

இவர்களின் இந்தக் கருத்தை முறியடிக்கும் ஆதாரங்களை அறிய ஆர்வமுடையவர்கள், மொறோக்கோ நாட்டின் ஹதீஸ் அறிஞரான அஷ்ஷெய்ஹ் அப்துழ்ழாஹ் அல்-குமாரி றஹிமஹுழ்ழாஹ் என்பவரின் 'அர்ரத்துல் முஹ்கமுல் மதீன்' என்ற நூலையோ அல்லது ஷாம் தேச ஹதீஸ் கலை அறிஞரும் அல்-ஹாபிழுமான அல் அல்லாமஹ் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் 'அல்மகாலாதுஸ் ஸுன்னிய்யஹ் பீ கஷ்பி ழழாலாதி அஹ்மதப்னி தைமிய்யஹ்' என்ற நூலையோ வாசிக்கவும். இந்த இரண்டாவது நூலுக்கு இவ்வாறு பெயர் வைக்கப்பட காரணம் உயிருடன் முன்னிலையில் இல்லாதோரைf; கொண்டு அழ்ழாஹ்விடம் வஸீலஹ் தேடக்கூடாது என்ற வழிகேடான கருத்தை முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப், ஹிஜ்ரீ 728 இல் மரணித்த இப்னு தைமிய்யாவின் நூற்களிலிருந்தே எடுத்திருப்பதாகும்.

காலின் இயக்க சக்தியை இழக்கச் செய்யும் நோய் ஏற்பட்ட ஒருவர் நம் தூதர் ﷺ அவர்கள் மரணித்த பின்பு ''யா முஹம்மத்''

*என்று அழைத்ததை நல்லதொரு வார்த்தையாக இப்னு தைமிய்யஹ் கருதியுள்ளார். இது அவரது 'அல் கலிமுத் தைய்யிப்' என்ற நூலில் அவரைத் தொட்டும் நிரூபனமானதாகும். ஐந்தாம் பதிப்பு. பதிப்பகம் அல் மக்தபுல் இஸ்லாமீ (1985).*

*இந்த வார்த்தையை நல்லதாக கருதிய இப்னு தைமிய்யஹ் 'அத்தவஸ்ஸுல் வல் வஸீலஹ்' என்ற தனது நூலில் அதற்கு மாற்றமாகக் கூறி தனக்குத்தானே முரண்பட்டுள்ளார். இப்னு தைமிய்யஹ்வின் 'தவஸ்ஸுல் வல் வஸீலா' என்ற நூலில் கூறப்பட்டதற்கு நேர்பட்ட முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் ''அல் கலிமுத் தையிப்'' என்ற அவரது நூலில் கூறப்பட்டதற்கு முரண்பட்டுவிட்டார்.*

خـــــدر *"ஹதர்" என்பது வைத்தியர்களிடத்தில் அறியப்பட்ட காலில் ஏற்படும் ஒரு நோயாகும். அதன் மூலம் கால் அதன் செயலை இழந்துவிடும்.*

## குத்பிய்யாக்கள்

குத்பிய்யாக்கள் எனப்படுவோர் செய்யித் குதுப் என்பவரை பின்பற்றுவோராகும்.

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْكَٰفِرُونَ

*( " அழ்ழாஹ் இறக்கியதை வைத்து தீர்ப்பளிக்காதவர்கள் குப்ரை அண்மித்த குற்றத்தை செய்தவர்களாகும்.")*

*அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 44*

என்ற வசனத்தின் வெளித்தோற்றக் கருத்தை வைத்து "யார் ஒரு சட்டத்திலேனும் அல்-குர்ஆனுக்கு மாற்றமாக தீர்ப்பு வழங்குவாரோ அவர் அழ்ழாஹ்வின் உலூஹிய்யத்தை (தெய்வீகத்தன்மையை) மறுத்து, தான் கடவுள் என்று வாதிட்டு விட்டார்." என்ற இக்கருத்தில் அவரைப் பின்பற்றுவோராகும்.

இதை அவருடைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு அரச யாப்புகளை வைத்து தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளையும், (அவர்களை எதிர்த்து கிளர்ச்சி செய்யாத) பிரஜைகளையும் கொலைசெய்வதை ஹலால் எனக் கருதுகிறார்.

மேற்குறித்த திருவசனம் குறித்து செய்யித் குதுப் வழங்கியிருக்கும் விளக்கமானது, பிரபல ஸஹாபியும், எம் பெருமான் ﷺ அவர்களின் பெரிய தந்தையின் மகனும், தர்ஜுமானுல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றவரும், மேலும் அழ்ழாஹ்வின் தூதரினால் குர்ஆனின் விளக்கத்தை வழங்குமாறு பிரார்த்திக்கப்பட்டவருமான இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்கள் இவ்வசனம் குறித்து வழங்கியிருக்கும் விளக்கத்துக்கு முற்றிலும் முரணானதாகும். ஒரு தடவை நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களை தன் பக்கம் அணைத்து, ﷺ யா அல்லாஹ் இவருக்கு குர்ஆனின் விளக்கத்தை கற்றுக் கொடுப்பாயாக" என்று துஆ செய்தமை ஸஹீஹுல் புஹாரியின்

முதலாம் பாகம் "பாபு கவ்லின் நபிய்யி ﷺ அழ்ழாஹும்ம அல்லிம்ஹுல் கிதாப்" என்று தலைப்பிடப்பட்ட பாடத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் நபி ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களுக்கு "யா அழ்ழாஹ் அவர்களுக்கு மார்க்க விளக்கத்தையும் குர்ஆனுக்கு விளக்கமளிக்கும் அறிவையும் வழங்குவாயாக!" என துஆ செய்தமை இப்னு ஹிப்பான் அறிவிப்புச் செய்த ஸஹீஹான ஹதீஸாகும். இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களல்லாத இன்னும் பல ஸஹாபாக்கள், காலநெடுகிலும் வந்த இஸ்லாமிய அறிஞர்களின் விளக்கங்களுக்கும் செய்யித் குதுபின் மேற்குறித்த விளக்கம் எதிராக இருக்கிறது.

மேற்குறித்த இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்கள்

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْكَٰفِرُونَ

என்ற இந்த வசனத்துக்கு "அந்த செயலானது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி காபிராக்கிவிடும் குற்றமல்ல. அந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'காபிரூன்' என்ற வார்த்தையானது குப்ரை நெருங்கிய குற்றத்தைத்தான் குறிக்கிறது." என்று விளக்கமளித்துள்ளதை ஹாகிம் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது முஸ்தத்ரக் என்ற நூலின் இரண்டாம் பாகத்தில் 313ம் பக்கம் ஸஹீஹான இஸ்னாதுடன் பதிவிட்டுள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் ரழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களின் "குப்ரை நெருங்கிய குற்றத்தைதான் அது குறிக்கிறது" என்ற விளக்கமே "முகஸ்துதியை பயந்துகொள்ளுங்கள். ஏனெனில் அது சிறிய ஷிர்க்காகும்" என்ற ஹதீஸுக்கும் வைக்கப்படுகிறது. இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள "சிறிய ஷிர்க்" என்பது தன் உச்சகட்ட பணிவை அழ்ழாஹ் அல்லாதவருக்கு வெளிப்படுத்துவதன் மூலம் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் பெரிய ஷிர்கு (இணைவைப்பு) அல்ல. மாறாக அது ஷிர்க்கை அண்மித்த குற்றமாகும். இந்த ஹதீஸை இமாம் ஹாகிம் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் முஸ்தத்ரக் என்ற நூலில் பதிவு

செய்துள்ளார்கள்.

எனவே (முகஸ்துதி என்ற ஷிர்கை வருத்திவைக்காத குற்றத்திற்கு) அஷ்ஷிர்குல் அஸ்கர் அதாவது ஷிர்க்கை அண்மித்த குற்றம் என்று நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்கள்

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْكَٰفِرُونَ

என்ற வசனத்துக்கு குப்ரை அண்மித்த குற்றம் அதாவது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடக்கூடிய குப்ர் அல்ல என்பதாக விளக்கமளித்துள்ளார்கள் என்று நாங்கள் கூறுகின்றோம்.

குர்ஆனின் விரிவுரையாளர் மற்றும் 'ஹப்ருல் உம்மஹ்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற அப்துழ்ழாஹ் இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களையும் அவர்களது தந்தையாகிய அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களையும் அழ்ழாஹ் பொருந்திக்கொள்வானாக! மேலும் முஸ்லிம்கள் சார்பாக அவர்களுக்கு நற்கூலியும் வழங்குவானாக!

இதுபற்றிய விபரமானது தொழுகையை விடுதல், ஒரு முஸ்லிமை (உரிமையின்றி) கொலை செய்தல் போன்ற பெருங்குற்றங்கள் குப்ர் என்பதாக ஸஹீஹான ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளதானது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடக் கூடிய அதாவது யாரொருவர் மேற்கூறப்பட்ட ஒன்றை செய்வாரோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுவார் என்ற குற்றத்தை நபி ﷺ அவர்கள் நாடவில்லை என்பதாகும். எனவே அதன் விளக்கமானது அக்குற்றங்களை குப்ருக்கு ஒப்பீடு செய்வதேயாகும்.

அதுவானது சாஸ்திரகாரரர்களிடம் சென்று அவர்களை உண்மைப்படுத்துபவர்களின் விடயத்தில் ''யாராவது குறிசொல்பவனிடம் அல்லது சாஸ்திரகாரனிடம் சென்று அவன் சொல்லக்கூடியதை வைத்து அவனை உண்மைப்படுத்தினால் அவன் முஹம்மத் ﷺ அவர்களுக்கு இறக்கப்பட்டதை நிராகரித்தவனாக ஆகிவிடுகின்றான்'' என்ற நபி ﷺ அவர்களைத்

தொட்டும் வந்துள்ளதைப் போல. இது ஸஹீஹான ஹதீஸாகும். ஒரு முஸ்லிம் வெறுமனே சாஸ்திகாரர்களிடம் சென்று அவர்கள் சொல்வதை உண்மைப்படுத்துவதன் மூலம் அவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறான் என்று மேற்குறித்த ஹதீஸின் மூலம் நபி ﷺ அவர்கள் நாடவில்லை. மாறாக அது குப்ருக்கு ஒப்பான பெரும்பாவமாகும் என்பதையே நாடியுள்ளார்கள்.

முஹம்மத் ﷺ அவர்கள்

سِبَابُ المُسْلِمِ فسوقٌ وقِتَالُهُ كُفرٌ

'' ஒரு முஸ்லிமை திட்டுவது பாவமாகும். மேலும் அவனைக் கொலை செய்வது குப்ராகும்'' என்று சொன்னார்கள்.

மேலும் அவனைக் கொலை செய்வது குப்ராகும் என்ற நபி ﷺ அவர்களின் வார்த்தை மூலம் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை கொலை செய்வது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடக்கூடிய குப்ர் என்பதை அவர்கள் நாடவில்லை. மாறாக அதன் மூலம் நாடப்படுவது யாதெனில் குப்ருக்கு ஒப்பான பெரும் பாவம் என்பதையேயாகும். ஏனெனில்

وَإِن طَآئِفَتَانِ مِنَ ٱلْمُؤْمِنِينَ ٱقْتَتَلُواْ

அத்தியாயம் : அல்-ஹுஜுராத் வசனம் : 9

என்ற வசனத்தின் மூலம் முஸ்லிம்களில் ஒருவருக்கொருவர் யுத்தம் செய்துகொண்ட இரு கூட்டத்தினரை முஃமின்கள் என்பதாக குர்ஆன் குறிப்பிட்டுள்ளதற்காகவேண்டியாகும்.

பிரபல ஸஹாபி அல் பராஉ பின் ஆஸிப் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلْكَٰفِرُونَ

என்ற வசனமும்

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلظالمون

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلْفَاسِقُونَ

ஆகிய வசனங்களுமாவன ''அழ்ழாஹ் இறக்கிய வேதத்துக்கு மாற்றமாக தீர்ப்பளித்த காபிர்களுடைய விடயத்திலே அதாவது யஹூதிகள் மற்றும் யஹூதி போன்றோர் விடயத்தில் அருளப்பட்டதேயன்றி அழ்ழாஹ் இறக்கிய வேதத்துக்கு மாற்றமாக தீர்ப்பளித்த முஸ்லிம்கள் விடயத்திலல்ல.'' இது ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ளது.

இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களைத் தொட்டும் இமாம் ஹாகிம் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவிப்புச் செய்ததைப் போன்று இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் 'அஹ்காமுன் நிஸா' என்ற கிரந்தத்தின் 44ம் பக்கம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்மாஈல் இப்னு ஸயீத் அவர்கள் கூறுகிறார்கள். நான் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் ''ஒருவர் பெரும்பாவங்களை விடாது தொடர்ச்சியாக செய்து வருகிறார். எனினும் அவர் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், ஜும்அஹ் ஆகிய கடமைகளை விட்டுவிடுவதுமில்லை. எனவே அவர்

**لايزني الزاني حين يزني وهو مؤمن ولايشرب الخمر حين يشربها وهو مؤمن ولا يسرق حين يسرق وهو مؤمن**

''ஒரு விபச்சாரன் விபச்சாரம் செய்கையில் முஃமினாக விபச்சாரம் செய்வதில்லை. மது அருந்தும் ஒருவர் மது அருந்துகையில் முஃமினாக மது அருந்துவதில்லை. ஒரு திருடன் திருடுகையில் முஃமினாகத் திருடுவதில்லை''

என்ற நபிமொழி போன்றதிலே உட்பட்டவராக அவர் ஆகிவிடுவாரா? என்றும்

وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْكَٰفِرُونَ

என்ற வசனத்திற்கு ''குப்ருன் தூன குப்ரின்'' என்ற இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களின் விளக்கத்தில் இடம்பெற்றுள்ள இந்த குப்ரானது யாது? எனவும் கேட்டேன்.

*“ மேற்குறிப்பிடப்பட்ட திருக்குர்ஆன் வசனம் மற்றும் ஹதீஸிலிருந்து விளங்கப்படும் குப்ரானது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும் குப்ரல்ல. குப்ர் எனும் வார்த்தையானது பல படித்தரங்களைக் கொண்டதாகும்.” என பதிலளித்தார்கள்.*

*தொடர்ந்தும் நான் கேட்டேன் “என்றாலும் அவர் தொடர்ந்து பெரும்பாவம் செய்யப்பயப்படுகிறார். பாவமன்னிப்புப் பெற எண்ணி மன்னிப்பையும் வேண்டுகிறார். ஆனாலும் பாவத்தை விட்டபாடில்லை. இவரின் நிலைப்பாடு என்ன? ” என வினவினேன். அதற்கு இமாமவர்கள் “(அழ்ழாஹ்வுடைய அச்சமின்றி தொடர்ச்சியாகப் பாவச்செயல் செய்துவருபவரை விட பாவச்செயலில் ஈடுபடுவதுடன்) அழ்ழாஹ்வை அச்சம் கொள்பவர் ஏதோ ஒருவகையில் நல்ல நிலையில்தான் இருக்கிறார்.” எனப் பதிலளித்தார்கள்.*

*மேற்குறிப்பிட்ட ஆயத் தொடர்பாக இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களினதும் மற்றும் பராஉ இப்னு ஆஸிப் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களினதும் விளக்கத்தைத் தவிர வேறு ஒரு விளக்கம் ஸஹாபாக்களைத் தொட்டும் ஸஹீஹான ஆதாரத்துடன் பதிவிடப்படவில்லை. இந்த விளக்கத்தின் அடிப்படையிலேயே ஹிஜ்ரீ 14 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அண்மிக்கும் வரைக்கும் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் இருந்துள்ளனர். பின்புதான் எகிப்திலே செய்யித் குதுப் என்ற இவர் தோன்றி, குர்ஆனுக்கு விளக்கம் என்ற பெயரில் ஒரு கிதாபை கோர்வை செய்தார். அதிலே, பல மார்க்க விவகாரங்களில் குர்ஆனின் பிரகாரம் தீர்ப்பு வழங்கி, ஏதாவதொரு விவகாரத்தில் குர்ஆனுக்கு மாற்றமாக தீர்ப்புச் செய்வோரையும், அந்த தீர்ப்புச் செய்பவரின் பிரஜைகளையும் காபிராக்குகின்றார்.*

*இன்று இஸ்லாமிய நாடுகளில் வாழும் முஸ்லிம் நீதிபதிகள் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமைச் சட்டம், வஸிய்யத் போன்ற விடயங்களில் குர்ஆனை வைத்து சரியான தீர்ப்பு வழங்கிவருவதுடன், இன்னும் சில விடயங்களில் மார்க்கம் அல்லாததைக் கொண்டு தீர்ப்பு வழங்கி வருகின்றனர். இதை விடுத்து சகல விடயங்களிலும் குர்ஆனை வைத்து தீர்ப்பு*

*வழங்கக்கூடிய எவரையும் இக்காலத்தில் காணமுடியாதுள்ளது. நிலைமை இவ்வாறிருக்க செய்யித் குதுபும், அவரது தொண்டர்களும் மேற்கூறப்பட்ட மாதிரியான நீதிபதிகளையும், அந்நீதிபதிகளுக்கு எதிராக இவர்களுடன் இணைந்து கிளர்ச்சி செய்யாத பிரஜைகளையும் காபிர்களாக்கி, ஆயுதங்களைக் கொண்டோ அல்லது வெடிக்க வைப்பது கொண்டோ அது அல்லாத அவர்களுக்கு முடியுமான ஏதேனும் ஒரு வழியிலோ அவர்களை கொலை செய்வதை ஹலாலாக்கியுள்ளனர்.*

*இந்த விடயத்திலே செய்யித் குதுபிற்கு கவாரிஜ்களைத் தவிர எந்த முன்னோர்களும் கிடையாது. ஏனெனில் இவர்கள்தான் விபச்சாரம் செய்தல், மது அருந்துதல் மற்றும் லஞ்சம் அல்லது நட்பு அல்லது நெருங்கிய உறவுக்காக வேண்டி ஷரீஅத்துக்கு மாற்றமாக தீர்ப்பை வழங்குதல் போன்ற பாவத்தை செய்ததற்காக முஸ்லிமை காபிராக்குகிறார்கள்.*

*இந்த செய்யித் குதுப் இஸ்லாமிய கொள்கை நிராகரிப்பாளராகவே 11 வருடங்கள் இருந்தவர் என்பதை அவரே ஏற்றுக் கொண்டுள்ளார். பின்புதான் அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா றஹிமஹுல்லாஹ் என்ற அறிஞர் (நன்னோக்கத்தில்) தோற்றுவித்த குத்பிய்யஹ்களுடன் இணைந்தார். செய்யித் குதுப் மற்றும் இன்னும் சிலர் அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா றஹிமஹுமுல்லாஹ் அவர்கள் உயிருடன் இருந்த காலகட்டத்திலேயே மார்க்கத்திற்கு மாற்றமாக தீர்ப்பு வழங்கும் முஸ்லிமைக் காபிராக்காத ஈடேற்றமான அவர்களது பாதையை விட்டும் தடம்புரண்டனர். எனவே இஸ்லாத்துக்கு எதிரான இவர்களின் சிந்தனையை அறிந்த அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா றஹிமஹுமுல்லாஹ் அவர்கள், (செய்யித் குதுபையும், அவருடன் இணைந்தோரையும் குறித்து) "இவர்கள் (மெய்யான) இஃவான்களுமல்ல முஸ்லிம்களுமல்ல." எனக் கூறினார்கள்.*

*அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா றஹிமஹுமுல்லாஹ் அவர்களை துயரக்கூடியவர்களில் ஒருவராகிய கலாநிதி முஹம்மத் கஸாலி என்பவர் தனது 'மின் மஆலிமில் ஹக்' என்ற நூலில் 264 ம் பக்கத்தில் "அல் உஸ்தாத் அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா*

றஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆரம்ப கட்டத்தில் இந்த ஜமாஅத்தினரை உருவாக்கிக் கொண்டிருந்த வேளை அக்காலத்தில் இருந்த முக்கியமானவர்களும், தலைவர்களும் மக்களுக்கு ஏற்படும் சங்கடங்களை எதிர்த்து முகம் கொடுக்க தகுதியில்லாதவர்களாக இருந்தனர். அதனால் அல்-உஸ்தாத் அவர்கள் 'நிழாமுல் காஸ்' என்ற பெயரில் யுத்தம் செய்ய பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை உருவாக்கினார். அவர்களை தயார்செய்வதன் அவசியம் (முஸ்லிம்களின் பூமிகளில்) ஆக்கிரமிப்பு செய்த போர்வீரர்களுடன் யுத்தம் செய்வதற்காகவாகும். மக்களுடன் மக்களாக மறைந்திருந்த இந்த வாலிபர்கள் பின்பு வந்த காலப்பகுதியில் அந்த ஜமாஅத்திற்கே பெரும் கேடாக ஆகினர். அவர்களில் சிலர் சிலரை கொலை செய்து, இஸ்லாமிய அறிவு இல்லாத மற்றும் பொது நலன்களை அறியாதவர்களின் கரங்களில் பயங்கரவாத, பாழாக்கும் கருவிகளாக மாறினர். அஷ்ஷெய்க் ஹஸனுல் பன்னா றஹிமஹுல்லாஹ் அவர்கள் வபாத்தாக முன் இவர்கள் குறித்து "இவர்கள் மெய்யான இஹ்வான்களும் அல்ல. முஸ்லிம்களும் அல்ல." எனக் கூறினார்கள் என முஹம்மத் கஸாலி பதிவிட்டுள்ளார்.

செய்யித் குதுப் வழங்கிய விளக்கத்தினால் பலர் பித்னாவுக்குள் சிக்கி, அதனை அமுல்படுத்தும் விதமாக அவர்களுக்கு மாற்றம் புரிவோரை கொலை செய்வதை அல்லாஹ்விடம் நன்மையைப் பெற்றுத்தரும் வணக்கமாகக் கருதி, எகிப்து, அல்ஜீரியா, சிரியா மற்றும் பல நாடுகளிலும் வாழ்ந்த பெரும் திரளானோரை கொலை செய்தனர்.

சிரியா நாட்டின் ஹலப் என்ற நகரத்தின் இப்ரீன் என்ற ஊரில் இஸ்லாமிய மார்க்க பத்வா வழங்கும் அறிஞரான அஷ்ஷெய்க் முஹம்மத் ஷாமிய்யீ அவர்கள் குத்பிய்யாக்களது கொள்கைக்கு முரண்பட்டதால் இஷா தொழுகை முடிந்து மக்கள் சென்ற பின்பு பள்ளிவாசலுக்குள் இவர்கள் நுழைந்தனர். அங்கு அந்த அறிஞருடன் வேறொருவரும் இருந்தார். அவ்வறிஞரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடாத்திய போது அறிஞரை பாதுகாக்க முனைந்தார் அந்த நபர். அவரையும் பின்பு அந்த அறிஞரையும் பள்ளிவாசலுக்குள் படுகொலை செய்தனர்.

*லஞ்சம், உறவு அல்லது செல்வாக்குடையோரை பொருந்திக் கொள்ளச் செய்தல் ஆகியவற்றுக்காக குர்ஆனல்லாததைக் கொண்டு தீர்ப்பு வழங்குவது அன்றும் இன்றும் முஸ்லிம்களின் நீதிபதிகளிடம் காணப்படக்கூடியதாக இருக்கின்றன. எனினும் குர்ஆன் அல்லாதைக் கொண்டு தீர்ப்பளித்ததற்காக அவர்களை முஸ்லிம்கள் காபிர்களாக்கவில்லை. மாறாக அவர்களை பெரும்பாவம் செய்த பாவிகளாகவே கருதுகின்றனர்.*

*இந்த செய்யித் குதுபின் அடிவருடிகள் அவர்களது ஜமாஅத்தைப் பற்றி வாசகம் இடுகையில் பல யுக்திகளைக் கையாளுகின்றனர். இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் இவர்கள் எகிப்து போன்ற நாடுகளிலே "ஹிஸ்புல் இஹ்வானில் முஸ்லிமூன்" என்ற பெயரிலும் லெபனானில் ''இபாதுர் றஹ்மான்'' என்ற பெயரிலும் அறியப்படக்கூடியவர்களாக இருந்தனர். நம்பிக்கையிலும் செயலிலும் இஸ்லாத்தின் யதார்த்தத்தின் பக்கம் அழைப்பவர்கள் என்று தங்களை மக்கள் எண்ணுவதற்காக ''ஜமாஅதுல் இஸ்லாமிய்யஹ்'' (இஸ்லாமிய கூட்டத்தினர்) என்ற பொதுவான மூன்றாவது பெயரொன்றை புதிதாக வைத்துள்ளனர். ஆனாலும் அவர்களின் நிலைப்பாட்டின் யதார்த்தம் அதற்கு மாற்றமாகவே உள்ளது.*

## ஹிஸ்புத் தஹ்ரீர்

*கலீபஹ்வுக்கு பைஅத் செய்யாமல் மரணித்தவர் ஜாஹிலிய்யஹ்களின் அதாவது சிலை வணங்கிகளின் மரணமாக மரணிக்கின்றனர் என்ற ஹிஸ்புத் தஹ்ரீர்களின் கூற்று அவர்கள் உம்மத்தை விட்டும் தனித்துச்சென்ற விடயங்களில் நின்றுமுள்ளதாகும்.*

*இவர்களின் கூற்றுப் பிரகாரம் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக மரணித்த முஸ்லிம்கள் அனைவரும் ஜாஹிலிய்யஹ் மரணமாகவே மரணிக்கின்றனர். ஏனேனில் இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் கலீபஹ் ஒருவர் இல்லாமையேயாகும். அனைத்து முஸ்லிம்களின் காரியங்களையும் நிர்வகிக்கக்கூடிய பொதுவான ஆட்சி நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே துண்டித்துவிட்டது. தற்காலத்தில் கலீபஹ்வை நியமிக்காமல் விடுவதில் முஸ்லிம்களுக்கு அதாவது பிரஜைகளுக்கு தங்கடமுள்ளது. பிரஜைகள் தற்காலத்தில் ஒரு கலீபஹ்வை நியமிக்க சக்திபெற்றவர்களாக இல்லை. எனவே அவர்களின் குற்றம்தான் என்ன?*

*அழ்ழாஹ் கூறியுள்ளான்*

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا

*அத்தியாயம் : அல்-பகறஹ் வசனம் : 286*

*மேலும் இதைவிட வழிகேட்டால் மிகப்பாரதூரமானது ஒரு அடியான் தனது நிர்ப்பந்தமற்ற சுயவிருப்பு சார்ந்த செயல்களை அவனேபடைக்கிறான் என்ற அவர்களின் கூற்றாகும். அவர்கள்*

ٱللَّهُ خَٰلِقُ كُلِّ شَيْءٍ

*( “ அனைத்து வஸ்த்துக்களையும் அழ்ழாஹ்வே படைக்கின்றான் அதாவது இல்லாமையிலிருந்து உண்டுபண்ணுகின்றான்”.)*

*அத்தியாயம் : அஸ்ஸுமர் வசனம் : 62*

*என்ற அழ்ழாஹ்வின் கூற்றுக்கு முரண்பட்டுவிட்டனர்.*

*ஏனெனில் மேற்கூறப்பட்ட வசனத்திலே இடம்பெற்றுள்ள "شـــــــــيء" என்ற பதமானது சடப்பொருளையும் சடப்பொருளின் செயலையும் உள்ளடக்கிக்கொள்ளும். மேலும்*

هَلْ مِنْ خَـٰلِقٍ غَيْرُ ٱللَّهِ

*"அழ்ழாஹ்வையன்றி படைப்பாளன் வேறு யாருமுண்டோ?!")*
*அத்தியாயம் : அல்பாதிர் வசனம் : 03*

*என்ற வசனத்துக்கும் மற்றும்*

قُلْ إِنَّ صَلَاتِى وَنُسُكِى وَمَحْيَاىَ وَمَمَاتِى لِلَّهِ رَبِّ ٱلْعَـٰلَمِينَ لَا شَرِيكَ لَهُ

*அத்தியாயம் : அல்அன்ஆம் 162,163*

*என்ற வசனத்துக்கும் முரண்பட்டுவிட்டனர்.*

*தொழுகை, ஹஜ் வணக்கம் ஆகிய அடியானின் சுயவிருப்பம் சார்ந்த செயற்கள், பிறப்பு, இறப்பு ஆகிய அடியானின் சுயவிருப்பத்தைச் சாராத செயற்கள் ஆகிய அனைத்தையும் அவனது படைப்புகளாக அழ்ழாஹ் ஆக்கியுள்ளான். அதில் எவரும் அவனுடன் கூட்டுச் சேரமாட்டார்கள். அதாவது அவனே அவைகளை இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு வெளிப்படுத்தினான். எனவே மேற்கூறப்பட்ட வசனங்கள் படைக்கப்பட்டவைகளாகிய உடற்தன்மை, அசைவு, அமைதி, நிறம், சிந்தனை, வலி, இன்பம், அறிவு, இயலாமை, பலவீனம் ஆகியன அழ்ழாஹ் படைப்பது கொண்டே உண்டானதாகும், அவனல்லாதவர்களால் அல்ல என்று அறிவிக்கின்றன. அடியார்கள் அவைகளைச் செய்கிறார்களே தவிர அவைகளைப் படைப்பதில்லை. இதுவே முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவாகும். இதன் மீதே ஆரம்ப நூற்றாண்டில் இருந்தவர்களும், இன்று வரை வாழ்ந்து வரும் பெரும்பான்மையினரும் இருந்து வருகின்றனர்.*

فَلَمْ تَقْتُلُوهُمْ وَلَـٰكِنَّ ٱللَّهَ قَتَلَهُمْ

*அத்தியாயம் : அல்-அன்பால் வசனம் : 17*

*என்ற அழ்ழாஹ்வின் கூற்றானது அடியான் அவனது சுயவிருப்புசார்ந்த மற்றும் அது அல்லாத செயற்களை பொதுவாகவே அவன் படைப்பதில்லை என்பதை அறிவிக்கும் வசனங்களிலுள்ளதாகும். முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபட்டு (எதிரிகளை) கொலை செய்தனர். யதார்த்தத்தில் முஸ்லிம்கள் அவர்களைக் கொலை செய்தார்கள் என்பதை அழ்ழாஹ் நிராகரித்துள்ளான். ஏனெனில் ஸஹாபாக்கள் செய்த இந்தக் கொலை நடைபெற்றுள்ளது. அவர்கள் செய்த இந்தக் கொலையை அவர்களுமோ படைக்கவில்லை. மாறாக அழ்ழாஹ்வே அதனைப் படைத்துள்ளான். வெளிரங்கம் மற்றும் "கஸ்பு" என்ற அமைப்பில் அவர்கள் அதனை செய்தார்கள். அழ்ழாஹ்வே அதனை படைத்தான். அதாவது அவனே அதனை இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு ஏற்படுத்தினான்.*

*இந்த வசனத்தை அடுத்து அழ்ழாஹு தஆலா கூறியுள்ளான்*

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ ٱللَّهَ رَمَىٰ

*அத்தியாயம் : அல்-அன்பால், வசனம் : 17*

*"(நாயகமே ﷺ!) எறிகின்ற செயலை நீர் செய்த வேளை எறிதல் என்ற செயலை நீர் படைக்கவில்லை. எறிதல் என்ற செயலை அழ்ழாஹ்தான் படைத்தான்."*

*யதார்த்தம் மேலும் உருவாக்கல் அதாவது இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு வெளிப்படுத்தல் என்ற கருத்தில் அவ்வெறிதலை அழ்ழாஹ்வின் தூதரைத் தொட்டும் அவன் மறுத்தான். உங்கள் மூலம் நடந்த அவ்வெறிதலை நீங்கள் படைக்கவில்லை. மாறாக உங்கள் மூலம் ஏற்பட்ட அவ்வெறிதலை அவன் உருவாக்கினான். அதாவது அழ்ழாஹு தஆலா அவ்வெறிதலை ஒரு விதத்தில் மறுத்து (மற்றும்) ஒரு விதத்தில் அதனைத் தரிபடுத்தினான். அவ்வெறிதல் தூதருக்குரிய படைப்பாக இருப்பதை அவன் மறுத்து மேலும் அதனை அவர்கள் சம்பாதித்து, அதாவது அதனைப் படைக்காமல் செய்தார்கள் என்ற விதத்தில் அதனை அவன் (அவர்களுக்கு) தரிபடுத்தினான்.*

*ஹிஸ்புத்தஹ்ரீர் இவ்விரு வசனங்களுக்கு முரண்பட்டிருப்பது தெளிவானதாகவும், மற்ற வசனத்துக்கு அவர்கள் முரண்பட்டிருப்பது மிக தெளிவானதாகவுமுள்ளது.*

*இமாம் அபூ ஹனீபஹ் றஹிமஹுல்ழாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.*

*" அடியார்களுடைய செயற்களாவன அவர்களினால் செய்யப்படுகின்றன. அழ்ழாஹ்வினால் படைக்கப்படுகின்றன."*

*இதன் பிரகாரமே முன்னோர்களும், பின்னோர்களும் இருந்து வருகின்றனர். இதற்கு மாறுசெய்வதானது குர்ஆனுக்கும், றஸூலுழ்ழாஹ் அவர்களின் ஹதீஸுக்கும் மாறுசெய்வதாகும்.*

*புகாரீ மேலும் அவரல்லாதோர் அறிவித்துள்ளார்கள். "அழ்ழாஹ்வின் தூதர் அவர்கள் ஹஜ் அல்லது உம்றஹ் அல்லது யுத்தம் இவைகளிலிருந்து மீளுகையில்*

**لا إله إلا الله وحده لا شريك له نصر عبده وأعز جنده وهزم الأحزاب وحده**

*("உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனுக்கு எவ்வித இணை துணையும் கிடையாது. அவனது அடியாருக்கு அவனே உதவினான், அவனது படையை அவன்தான் உயர்வடையச்செய்தான், எதிரிகளை அவன்தான் எதுவித இணை துணையின்றித் தோறகடித்தான்.") என்று சொல்பவர்களாக இருந்தார்கள்."*

*எதிரிகளை தோற்கடிப்பது வெளித்தோற்றத்தில் அவர்கள் மூலம் உண்டாகியிருப்பதுடன் நபி ﷺ அவர்கள் அதனை அழ்ழாஹ்வினால் மாத்திரம் படைக்கப்பட்டுள்ளதாக ஆக்கியுள்ளார்கள். அவனுடன் அதில் எவரும் கூட்டுச்சேரவில்லை. இதுவே மிகத் தெளிவான விளக்கமாகும். அடியார்கள் அவர்களது செயற்களை பொதுவாகவே அவர்கள் படைக்கமாட்டார்கள் என்பதை அறிவிக்கக்கூடிய*

*விளக்கம் : "நீங்கள் பொறுமையாக இருங்கள். உங்கள் பொறுமை அழ்ழாஹ்வினால் படைக்கப்படுவது கொண்டே தவிர வேறில்லை."*

*அத்தியாயம் : அந்-நஹ்ல் வசனம் : 127*

மேலும்

وَمَا تَوۡفِيقِيٓ إِلَّا بِٱللَّهِۚ

*விளக்கம் : "எனக்கு அனுகூலம் செய்யப்படுவது அழ்ழாஹ்வினால் படைக்கப்படுவது கொண்டே தவிர வேறில்லை."*

*அத்தியாயம் : ஹூத் வசனம் : 88*

*என்ற அழ்ழாஹ்வுடைய கூற்றுப் போன்ற வேறு வசனங்களும் உள்ளன. இதுவானது படைத்தல் என்பது இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு வெளிப்படுத்துதல் என்ற அர்த்தத்தை உடையதாக இருந்தாலாகும். எனினும் படைத்தல் என்பதன் மூலம் ஒரு தோற்றத்தை வடிவமைத்தல் அல்லது இட்டுக்கட்டுதல் அல்லது நிர்ணயித்தல் என்பதை நாடப்படுமாயின் அதனை அடியார்களின் பால் இணைத்துச் சொல்லப்பட முடியும்.*

*அழ்ழாஹு தஆலா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய விடயத்தில்*

وَإِذۡ تَخۡلُقُ مِنَ ٱلطِّينِ كَهَيۡـَٔةِ ٱلطَّيۡرِ

*என்று கூறியுள்ளான்.*

*இங்கு* تَخۡلُقُ *என்பதன் அர்த்தம் நீங்கள் ஓர் வடிவத்தை செய்கிறீர்கள் என்பதாகும். மாறாக அதன் அர்த்தம் அப்பறவையை இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு நீங்கள் வெளிப்படுத்துகின்றீர்கள் என்பதல்ல.*

மேலும்

فَتَبَارَكَ ٱللَّهُ أَحۡسَنُ ٱلۡخَٰلِقِينَ

என்ற அழ்ழாஹ்வின் கூற்றும் அது போன்றேயாகும். இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள خَلْـــق(படைத்தல்) என்பதன் அர்த்தம் நிர்ணயித்தல் என்பதாகும். இல்லாமையிலிந்து உள்ளமைக்கு வெளிப்படுத்துதல் என்ற அர்த்தத்திலுள்ள படைத்தல் என்பதல்ல. எனவே இவ்வசனத்தின் கருத்தானது அழ்ழாஹ் நிர்ணயிப்பாலர்களில் மிகச் சிறந்த நிர்ணயிப்பாலனாகும் என்பதாகும்.

மேலும் அவன்

وَتَخْلُقُونَ إِفْكًا

(நீங்கள் இட்டுக்கட்டுகிறீர்கள்) என்று கூறியுள்ளான்.

خَلْقُ الإفك அதாவது இட்டுக்கட்டுதலை முஷ்ரிகீன்களின் பால் இணைத்து அவன் கூறியுள்ளான். இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு வெளிப்படுத்துதல் என்ற அர்த்தத்தில் அவர்கள் இட்டுக்கட்டுதலை படைக்கிறார்கள் என்பது அதன் அர்த்தமல்ல.

படைத்தல் என்ற சொல் நிர்ணயித்தல் என்ற அர்த்தத்தில் வருவதானது பழங்கால அறேபியர்களிடத்தல் அறியப்பட்ட ஒன்றாகும். ஒரு புலவர் கூறியுள்ளார்:

وَلأَنْتَ تَفْرِيْ ما خَلَقْتَ وَبَعْـ ض القوم يخلق ثم لا يفري

அப்புலவர் தன் பாராட்டுக்குரிய ஒருவருக்கு கூறுகின்றார்:
" நீங்கள் நிர்ணயித்து பின் அதனை நிறைவேற்றுகிறீர்கள். நீங்களல்லாதோர் நிர்ணயிக்கின்றனர். பின் அதனை நிறைவேற்றமாட்டார்கள்."

அழ்ழாஹ் முஸ்லிம்களுக்கு கடமையாக்கிய தீயதை தடுத்தல் என்ற அடிப்படையில் அவர்களை நிராகரிப்பதும் மேலும் அவர்களை விட்டும், ஸஹாபாக்களுடைய காலம் தொட்டு இது வரைக்குமுள்ள பெரும்பான்மை முஸ்லிம்கள் எந்தப் பாதையில் சென்றார்களோ அதற்கு முரண்பட்ட அனைத்துப் பிரிவினர்களை விட்டும் மக்களை எச்சரிப்பது கடமையாகும்.

அஹ்லுஸ்ஸுன்னஹ்வின் அதிகத்தை கவனிக்கையில் தனித்துச்சென்ற அவர்கள் சிறு பிரிவினர்களேயாகும்.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் ஜமாஅத்தை (பெரும்பான்மையை) பற்றிப் பிடித்துக்கொள்ளுமாறு வஸிய்யத் செய்திருக்கிறார்கள்.

அழ்ழாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்

**عليكم بالجماعة وإياكم والفرقة فإن الشـــيطان مع الواحد وهو من الاثنين أبعد فمن أراد بحبوحة الجنة فليلزم الجماعة**

'' ஜமாஅத்தை (பெரும்பான்மை சமூகத்தை) நீங்கள் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். பிளவுபடுவதை உங்களுக்கு நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில் ஷைத்தான் தனித்துச்சென்றவருடன் இருக்கின்றான். மேலும் அவன் இருவரை விட்டும் மிகத் தூரமானவன். எனவே எவர் சுவன இன்பத்தைப் பெற விரும்புகிறாரே அவர் ஜமாஅத்தை (பெரும்பான்மை சமூகத்தை) பற்றிப்பிடித்துக்கொள்ளட்டும்.'' என்று கூறியதாக அவர்களைத் தொட்டும் ஸஹீஹாக வந்துள்ளது.

அதனைத் திர்மிதீ அவர்கள் அவர்களுடைய ஜாமிஇலே அறிவித்து, அதற்கு **حســـــــــــــن صحيح** (ஹஸன் ஸஹீஹ்) என்று கூறியுள்ளார்கள். மேலும் அதனை இப்னு ஹிப்பான், இப்னு மாஜஹ் மற்றும் அவர்களல்லாதோரும் அறிவித்திருக்கிறார்கள்.

இம்மூன்று பிரிவினர்களுக்கும் நாம் செய்யும் உபதேசம் முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப், செய்யித் குதுப் மற்றும் தகிய்யுத்தீன் அந்நபஹானீ போன்றவர்களின் நூற் களிலிருந்தல்லாமல் (**خلق أفعال العباد**) ''கல்கு அப்ஆலில் இபாத்'' என்று பெயர்வைக்கப்பட்ட இமாம் புகாரியின் நூல், (**العقـــيدة الطحاوية**) "அல் அகீததுல் தஹாவிய்யஹ்'' என்று பெயர்சூட்டப்பட்ட இமாம் அபூ ஜஃபர் அத்தஹாவீ என்பவரின் நூல், அபூ மன்சூர் அப்துல் காஹிரிப்னி தாஹிர் அல் பக்தாதீ என்பவருக்குரிய (**تفسير الأسماء والصفات**) "தப்ஸீருல் அஸ்மாஇ வஸ் ஸிபாத்" எனும் நூல் போன்ற

அறிஞர்களின் கவனிக்கத்தக்க புத்தகங்களை அறிஞர்களிடம் படிக்க வேண்டுமென்பதும் மேலும் அஹ்லுஸ்ஸுன்னஹ் அறிஞர்களிடமிருந்து மார்க்க அறிவை கற்கவேண்டுமென்பதாகும்.

எனவே உங்கள் (தவறான) கோட்பாடுகளைக் களைந்து, இக்கோட்பாடுகளை பற்றிப்பிடித்து, ஷஹாதஹ் கலிமஹ்வை மொழிவீர்களாயின் நேர்வழி பெறுவீர்கள்.

அல்லாஹ்வே முடிவுகளை அறிந்தவன். அனைத்தைப் பற்றியும் நாம் (மறுமையில்) விசாரிக்கப்பட இருக்கின்றோம்.

அல்லாஹ்வே நன்கறிந்தவன்.